………………………………… நேர்முகத்தேர்வு இல:…………………..

…………………………………

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் 1 அலுவலர்களை பதவிக்காக நியமிப்பதன் நேர்முகத்தேர்வுக்காக அழைத்தல்.**

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் புதிய சேவை பிரமாண குறிப்பின் 11.2.2 க்கு அமைவாக நியமிக்கப்படும் தரம் 1 அலுவலர்களை பதவிக்காக நியமிக்கும் நேர்முகத்தேர்வுக்காக நீங்கள் அமைக்கப்பட்டுள்ளீர்களென மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

2. அதற்காக பத்தரமுல்ல இசுறுபாய கல்வி அமைச்சில் 04 ஆம் மாடியில் உள்ள கேட்போர்கூடத்தில் 2022.02.02 /09 எனும் தினத்தில் முற்பகல் / பிற்பகல் ………க்கு வருகைதருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

3. அத்தினத்தில் கீழ் குறிப்பிட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் நிறுவன தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிய சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் வேறுவேறாக (இல i தொடக்கம் x வரையான ஆவணங்கள் ) கோப்புகள் இரண்டை (2) கீழ் குறிப்பிட்ட தொடரொழுங்கில் தயாரித்து உங்கள் பெயர் மற்றும் நேர்முகத்தேர்வு இலக்கத்தை குறிப்பிட்டு நேர்முகப்பரீட்சை சபைக்கு முன்வைக்க வேண்டும். அனைத்து ஆவணங்களும் அதே தினத்தில் முன்வைப்பது கட்டாயம் என்பதோடு பின்னர் முற்படுத்தும் சான்றிதழ்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

i. நேர்முகப்பரீட்சைக்கான அழைப்பிதழ் கடிதம்

ii. பிறப்புச்சான்றிதழ் (பெயரில் மாற்றம் இருக்குமாயின் அதற்கான சத்திய உறுதியுரை)

iii. தேசிய அடையாள அட்டை

iv. சேவை அனுபவம் உறுதிப்படுத்துவதற்கு

a. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை நியமனக்கடிதம்
b. இலங்கை ஆசிரியர் கல்வி கல்வியியலாளர் சேவையில் சேவை நிரந்தரமாக்கப்பட்ட கடிதம்
c. இலங்கை ஆசிரியர் கல்வியிலாளர் சேவையின் 2-11 வகுப்புக்கு பதவியுயர்த்தப்பட்ட கடிதம்
d. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் 2-1 வகுப்புக்கு பதவியுயர்த்தப்பட்ட கடிதம்
e. இலங்கை ஆசிரியர் கல்வியிலாளர் சேவையின் வகுப்பு 1க்கு/ தரம் 1க்கு பதவியுயர்த்தப்பட்ட கடிதம்

v. இலங்கை ஆசிரியர் கல்வி கல்வியியலாளர் சேவையில் மூன்றாவது வினைத்திறன் தாண்டல் பூர்த்திசெய்தமைக்குரிய முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா அல்லது கல்வி முகாமைத்தவம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா சான்றிதழ்.

vi. இலங்கை ஆசிரியர் கல்வி கல்வியியலாளர் சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி தொடக்கம் 2021.11.05 திகதி வரை திருப்திகரமான சேவைக்காலம் உள்ளதென்பது குறித்த, முழுசேவைக்காலத்தில் ஒழுக்காற்று தண்டனைக்குட்படவில்லை என்பதற்கான, சம்பளயேற்றங்கள் அனைத்தும் ஈட்டிக்கொள்ளப்பட்டமை தொடர்பில், சம்பளமற்ற விடுப்பு பெற்றுக்கொள்ளப்பவில்லை என்பதற்கும் உரிய வினைத்திறன் தாண்டல் பரீட்சை அனைத்திலும் சித்தியடைந்துள்ளமை தொடர்பில் பிரதம ஆணையாளர்/ பீடாதிபதி/ வலயக்கல்விப்பணிப்பாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் (இணைப்பு 1)

vii. மேலதிக கல்வி தகமைகள் - விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலின் புள்ளி திட்டத்தில் தொடரில 02யின் கீழான தகமை உறுதிப்படுத்தல் தொடர்பான உரிய சான்றிதழ்

viii. புள்ளித்திட்டத்தின் இல 04யின் கீழ் தகவல் தொடர்பாடல் அறிவு தொடர்பாக பெற்றுள்ள சான்றிதழ்

குறிப்பு:- சான்றிதழ் பத்திரத்தில் பாடநெறி காலம் குறிப்பிடப்படாவிடின் அந்த காலப்பகுதியை உறுதிப்புடத்துவதற்கு உரிய நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட கடிதம் நேர்முகப்பரீட்சையின் போது முன்வைக்க வேண்டும்

ix. புள்ளித்திட்டத்தின் இலக்கம் 05 இன் கீழ் கீழ்க்காணும் தகுதியை உறுதிப்படுத்தவதற்காக

a)யின் கீழ் புள்ளித்திட்டத்தின் இல 5.1.யில் குறிப்பிட்டவாறு கல்வி செயலாளர்/ பிரதம ஆணையாளரினால் வழங்கப்பட்ட அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட/ அரசின் இணைப்பு நிறுவனம் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்

b. கல்வி செயலாளர் அல்லது திணைக்களத் தலைவரினால் பொது 230B மெச்சுரையும் மற்றும் கண்டமும் மாதிரிக்கு அமைய முறையாக வழங்கப்பட்ட சேவை சான்றிதழ்

குறிப்பு: புள்ளித்திட்டத்தின் 5.1 கீழ் குறிப்பிடப்பட்டவாறு உரிய சான்றிதழ்களை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் உங்களால் முன்வைக்கப்படவேண்டும். திணைக்களத்தலைவர் ஆவது பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) ஆவார்.

x. ஆய்வுகளும் வெளியீடுகளும்

a) விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலின் புள்ளித்திட்டத்தின் இல 06யின் கீழ் உங்களால் முன்வைப்பதற்கு எதிர்ப்பார்க்கும் ஆய்வு மற்றும் வெளியீடுகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை முற்படுத்தும் போது அந்த ஆய்வு/ வெளியீடு யாதென தெளிவாக காட்டப்பட்ட பக்கம் /பக்கம் அந்த வெளியீட்டின் படைப்பு/ வெளியீட்டில் உங்கள் பெயர் குறிக்கப்பட்ட பக்கம் / பக்கங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் சகிதம் உரிய ஆய்வு மற்றும் வெளியீடுகளின் மூலப்பிரதி முற்படுத்தப்படவேண்டும்.

04. இணைப்பு மொழி தேர்ச்சி

i. கல்வி புலத்துக்குரிய பெற்றுக்கொடுக்கப்படும் தலைப்புகள் சிலவற்றில் எழுந்தமானமாக தெரிவு செய்யப்பட்ட தலைப்பின் கீழ் 3 நிமிட நேர முன்வைப்பு ஆங்கில மொழியில் மேற்கொள்ளப்படவேண்டும்

ii. அந்த முன்வைப்புக்காக தயாராவதற்கு 20 நிமிட நேரம் வழங்கப்படும்

iii. அந்த முன்வைப்பை அடிப்படையாகக்கொண்டு நேர்முகத்தேர்வு சபையினால் கீழ் காணும்வாறு புள்ளி வழங்கப்படும்.

a. விடயவுள்ளடக்கம் - 02 புள்ளி
b. முன்வைக்கும் விதம் -02 புள்ளி
c. மொழிப்பிரயோகம் -2புள்ளி

5. நேர்முகத்தேர்வில் நீங்கள் காட்டும் முழுத்திறமை மற்றும் ஆளுமைத் தொடர்பில் உங்களுக்கு உச்சப்புள்ளி 05 வழங்கப்படும்.

6. நேர்முகப்பரீட்சைக்கு வருகை தருவதற்கு போக்குவரத்து செலவு மற்றும் பிற கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது.

7. இந்த நேர்முகப்பரீட்சையின் போது உங்களால் காட்டப்படும் செயலடைவு மற்றும் உங்கள் கல்வி தகைமை அடிப்படையில் ஈட்டிக்கொள்ளும் புள்ளிகள் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் முழுத்திறமைகளின் முன்னுரிமை அடிப்படையில் மட்டும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் பீடாதிபதி /உப பீடாதிபதி/ அதிபர் பதவிக்காக நியமிக்கபப்படுதல் மேற்கொள்ளப்படும்.

8. இந்த நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படல் அல்லது தோற்றுதல் மட்டும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் பீடாதிபதி /உப பீடாதிபதி/ அதிபர் பதவி பெறுவதற்கு உரித்துடையதில்லையென தயவுடன் அறிவிக்கின்றேன்.

டப்ளிவ்.எம்.என்.ஜே. புஷ்பகுமார
சிரேஷ்ட உதவி செயலாளர்
கல்வி சேவைத் தாபனம்

கையொ./ பேராசிரியர்.கே. கபில சீ.கே. பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

கவனத்துக்கு: இந்த கடிதம் கிடைத்தமை தொடர்பில் வார தினத்தில் கடமை நேரத்தில் 0112787083 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து உறுதிப்படுத்தவும்.